R4789

## PROPER AND IMPROPER JEALOUSY

# சரியான மற்றும் தவறான பொறாமை

"நேச வைராக்கியம் (பொறாமை) பாதாளத்தைப் போல கொடியதாயிருக்கறது;அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது."உன்னதப்பாட்டு 8:6

மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளுதல் பாதாளத்தைப்போன்றது. வசனம் கூறுவது போல அது "பாதாளத்தைப்போல கொடியதாயிருக்கிறது." அது மனுக்குலத்தை விழுங்குகிறதாயிருக்கிறது. அது நியாயமற்றதும் மனநிறைவு உண்டாக்காததாகவும் இருக்கிறது. இது குறித்து ஒருவர் கூறியிருப்பதாவது; "பொறாமை என்பது, உணர்ந்து கொண்டாலும் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் அது இரத்தத்திற்கு தாகமாயிருக்கிறது. எந்த சமயத்திலும் சாதாரணமாக இருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் பலவீனப்பட்டாலும், பொறாமையானது அது வெறுக்கிற அல்லது நேசிக்கிறவர்களை கொல்லக்கூடியதாக இருக்கிறது." இன்னொருவர் மேல் உள்ள பிரியத்தினால் தான் நீக்கப்படுவோமோ என்கிற பயத்தையோ அல்லது தயவு காட்டும் காரியத்தில் ஒரு போட்டியினால் மிஞ்சப்படுவோமோ என்பதையோ அல்லது பிரபலம் அடைவதிலிருந்து தடுக்கப்படுதலையோ அது குறிக்கிறது.

நமது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறாமையானது அன்பின் பேரிலேயோ அல்லது பொறாமை மூலமாக செய்யப்படுகிற மிகவும் தீய வகையான கொடுமையாக இருக்கிறது. அது ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் எதிர்படுகின்ற பெரிய எதிரிகளில் ஒன்றாக இருக்கிறது. அது பகைகள், வன்மம், எரிச்சல், சண்டை போன்றவைகளுக்கு நேசம் உடையதாக இருக்கிறது. அது காணப்பட்டவுடனேயே தேவனுடைய மனிதனுடைய மற்றும் நல்ல கொள்கைகளுக்கு எதிரியாக கருதப்பட்டு கொல்லப்பட வேண்டும். அது ஒரு கணம் இருந்தால் கூட இருதயத்தை தீட்டுப்படுத்தும். பரிசுத்தம் மற்றும் அன்பின் ஆவியினால் சுத்திகரிப்பு வேலை செயல்படுத்தப்பட வேண்டும். அது தனக்குத்தானே ஒரு அசுரனாக மாத்திரமல்ல, அதன் நச்சுப் பற்கள் மற்றவர்களுக்கு துன்பத்தையும் கஷ்டத்தையும் கொடுக்ககூடியதாக இருக்கிறது, மனதானது ஒரு தடவை நஞ்சூட்டப்பட்டால், வெகு சீக்கிரத்தில் அது தனது நிறத்தையும் குணலட்சணத்தையும் கொண்டு வந்து விடும். அதை முழுவதுமாக சுத்தப்படுத்துவது மிகவும் கஷ்டமானதாக ஆகிவிடும்.

### "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்"

எனினும் அன்பு, ஞானம், பகை, எரிச்சல் போன்ற குணங்கள் தேவனிடம் இருப்பதால் நம்மிடமும் இருக்க வேண்டும். நாம் வாசிக்கிறதாவது: "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்." ஒரு மனிதனுக்கு வெறுப்பும், எரிச்சலும் தேவனுடைய போக்கிலேயே இருந்தால் அது சரியானது தான். நாம் தேவனைப்போல பாவத்தை வெறுக்க வேண்டும். ஆனால் பாவிகளை அல்ல. தேவனுடைய எரிச்சலானது நீதியானது; நிச்சயமாக அது பாவிக்கு நீதியான தண்டனையைக் கொடுப்பது நிச்சயம். நாம் வேறு தேவனை பெற்றோமானால், அவர் எரிச்சல் அடைவதாக நமக்கு கூறுகிறார். ஆனால் முறையற்ற எரிச்சல் கசப்புத்தன்மைக்கும் விழுந்து போன மானிட மனம் கீழ்ப்பட்டிருக்கிற மற்ற தீய குணங்களுக்கும் வழி நடத்தும். கர்த்தர் தம்மை எரிச்சலுள்ள தேவன் என்று கூறும் போது அவர் நமது முழு அன்பையும் நமது முழு நம்பிக்கையும் எதிர்பார்க்குதலையும் அவர் மேல் வைக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் முழுவதும் அவருக்கு இணக்கமாக இருக்கவும் நமது வாழ்க்கை முழுவதும் அவரது சித்தமே மேலானதாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

இது சர்வ வல்லவரின் சுயநலம் என்று நாம் நினைக்கக்கூடாது. எனெனில் இது ரத்து செய்யும் அதிகாரத்தின் கீழ் அவருடைய சிருஷ்டிகளுக்கு அதிகப்படியான சந்தோஷம், தற்கால ஜீவியத்தின் காரியங்கள் மற்றும் கடமைகளில் வெற்றி, தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினவைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் அவர்களை முழுமையாக ஆயத்தம் பண்ணவும் ஆகும்.

### "உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்"

பரிசுத்த பவுல், "நான் உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்" (2கொரிந்தியர் 11:2) என்று கூறும் போது, அவர்கள் மீது அவர் எரிச்சல் கொள்ள தூண்டப்படுகிறார் என்று புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக அவர் கொரிந்தியர்கள் மேல் அக்கறை கொள்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும், சரியானவைகளுக்காக அவர் வைராக்கியம் கொண்டிருக்கிறார். அவர்களும் அவருக்கு இணக்கமாக இருக்க வேண்டும். ஆகையால் அவரது வைராக்கியம் கர்த்தரின் சத்தியத்தின மேல் ஓர் ஆர்வம், ஆவலுடனான அக்கறை, எச்சரிக்கையான கவனிப்பு மற்றும் ஒரு தேவ வைராக்கியமாக இருக்கிறது. நிச்சயமாக இது சபையில் நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டிய வைராக்கியமாக இருக்கிறது. அப்போஸ்தலர் குறிப்பிடுகிற இந்த நிலைமையிலிருந்து, கிறிஸ்துவுக்குள்ளான எளிமை மற்றும் பரிசுத்தத்திலிருந்து வெளியேறினால் "இவை அனைத்தும் தவறு" என்று உணர வேண்டும். இதை சரிபண்ணுவதற்கு நமது சக்தி மற்றும் அறிவுடன் அனைத்தையும் செய்ய வேண்டும். இதை ஏதாவது ஒரு சபை அங்கத்தினரிடம் காண்போமானால், அது கிறிஸ்துவினிமித்தம் பிரதிபலிக்கும். வேறு எதுவும் தீங்கு இராதபடி அதை சரிபடுத்துவது சரியானது என்ற நாம் உணர வேண்டும்.

கர்த்தரினிமித்தம் நாம் வைராக்கியம் உடையவர்களாயிருந்தால், அது நம் சொந்த விருப்பத்தில் இருக்கும் ஒரு பொறாமையைக் காட்டிலும் வேறானது. வெகுச் சிலரே கர்த்தரினிமித்தம் வைராக்கியம் உடையவர்களாயிருக்கிறார்கள். அவரினிமித்தம் நமது வார்த்தைகளையும், செயல்கள் முதலானவைகளையும் ஆழ்ந்து பரிசோதிப்பது நல்லதாக இருக்கும். நாம் வைராக்கியம் உடையவர்களாயிருக்கும் போது, கர்த்தரினிமித்தம் வைராக்கியம் உடையவர்களாயிருக்கும் போது, அது தனிப்பட்ட முறையிலானதாயிராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இதை மூப்பர்கள் கவனிப்பது சரியானதாக இருக்குமா என்பதையும் நாம் மூப்பரிகளிடம் செல்வது நமது கடமையா அல்லது இல்லையா என்பதையும் கவனிக்க வேண்டும். கர்த்தரினிமித்தமும் அவரது ஊழியத்தின் நிமித்தமும் நாம் வைராக்கியம் கொண்டிருப்பது ஒரு பெரிய செயல்பாடு. அதே சமயம் நமது தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல அது கசப்பான வகையை சேர்ந்ததாக இருக்கக்கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்லுவோமேயானால், நாம் மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளாதிருப்பதையும், ஆனால் மற்றவர்களுக்காக, மற்றவர்களின் நலத்திற்காக, அனுகூலத்திற்காக வைராக்கியம் கொண்டிருப்பதையும் நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.